1005 05

REGD No. M. 3843.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

MADRAS

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கஉ. } திட்டை வெகுதானிய—கார்த்திகை 1938--டிசம்பர்--1௳ { திங்கள் ச

எண்.	உள்ளுறை.		பக்கம்.
1.	சமயச்சின்னங்கள்	...	77
2.	ஆணவமலம்	...	79
3.	ஸிந்துவும் ஹிந்துவும்	....	81
4.	மாதொரு பாகனும் மற்றைத் தெய்வங்களும்		82
5.	வியாசர்சுகரைப் பெற்றது	...	83
6.	வியாசருக்குச் சிவாநுக்கிரகம்	...	84
7.	வியாகரணம்	...	85
8.	மணி ஐயர்	...	89
9.	தமிழகராதி	...	93
10.	மகிடாசுர சம்மாரம்	...	99
11.	திருத்தம்	....	—
12.	ஸ்ரீ காசியாத்திரை விளக்கம்	....	(49-60)

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

செய்தித்திரட்டு.

திருவள்ளூர்:— இவ்வூர்ச் சிவாலயத்தில் கார்த்திகைச் சோமவார உபயங்கள் உபயக்காரரால் நடைபெற்றன: நடைபெறும். புழக்கங்களுக்காகப் புதிய குளம் தோண்டியும் பாய்கால் வடிகால்கள் கட்டியும் நிறைவேற்றியது. சித்தாந்த வித்தியாசாலையில் ஆண் பெண் இருபாலாருமாக 20-க்கு மேலுள்ள மாணவர்கள் செந்தமிழ்க்கல்விபயிலுவதுடன், தினந்தோறும் திருவீதிவலமாகவும் சிவாலயத்துள்ளும் தேவார பாராயணஞ் செய்தும் வருகிறார்கள். போர்டு பாடசாலையில் கார்த்திகை கூஉ சுகாதாரவாரச் கொண்டாட்டம் நடைபெற்றது. பல பெரியார்களும் மாணவர்களும் வந்து குழுமியிருந்தனர். கிராமாதிகாரி திரு. சேஷாத்திரி ஐயங்காருக்குத் தலைமையளித்துச் சுகாதாரத்தைப்பற்றி விரிவாக 'சிவநேசன்' இராமசாமி செட்டியாரும், சித்தாந்த வித்தியாசாலைத் தமிழாசிரியர் வித்துவான் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் சொற்பொழிவாற்றினர். கார்த்திகை கூஉ சிவாலயத்தில் சுவாமிகோவில் குமுதவரி முகூர்த்தம் செய்யப்பெற்றது.

பலவான்குடி:— ஐப்பசி ரூ௦உ சிவாலயத்திலிருந்து சுவாமி தேனாற்றுக்கு வந்து தீர்த்தங் கொடுத்தருளினர்.

ஆத்தன்குடி:— ஆத்தன்குடி, ஆ. முத்துப்பட்டணம், சொக்கலிங்கம் புத்தூர் ஆகிய மூன்றூர் தனவணிக நகரத்தார்களின் நன்கொடையைக் கொண்டு இயற்றப்பெற்ற புதிய கற்சாலையை ஜில்லாபோர்டு தலைவர், கானாடுகாத்தான் திருவாளர், க. வெ. சித. வெ. வேங்கடாசல செட்டியாரவர்களால் ஐப்பசி உசுஉ திறந்துவைக்கப்பெற்றுத் திறப்பு விழாக்கொண்டாட்டம் இனிதாக நிறைவேறியது.

கோனபட்டு:— ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் சாரணஇயக்கத்தார் சொ. ராம. சு. வாழிய இராமநாதனுக்கு 1—11—38ல் திருமண வாழ்த்துப்பா வழங்கினர்.

திருவாளர், கி. நா. ராம. நா. நாராயணன் செட்டியாரவர்கட்கு கார்த்திகை கரூஉ திருவோணநாள் நடைபெற்ற அறுபதாண்டு நிறைவு மணத்தைமுன்னிட்டு சிவாலயத்தில்அபிடேகஆராதனைகளும், ஐம்பெருங் கடவுளர்திருவுலாவும் சிறப்பாகச்செய்யப்பெற்றன. அந்தணராதியோருக்கு அறுசுவையினும் உறுசுவைத்தாய அமுதருத்தி ஆடையாதிய வழங்கப்பெற்றன.

விருத்தாசலம்:— இத்திருத்தலத்தில் காரைக்குடி, திருவாளர், கு. மெ. சொ. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கட்குக் கார்த்திகை கசுஉ அறுபதாண்டு நிறைவுவிழா ஆடம்பரமாக நடைபெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக

D.R

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு கஉ. | வெகுதானிய—கார்த்திகை 1938—டிசம்பர்—1௳ | திங்கள் ௪

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

சமயச் சின்னங்கள்.

இந்துக்கள் மத அடையாளமாக உடலில் அணிந்துகொள்ளுகின்றவை எவை?

விபூதி, சந்தனம், உருத்திராக்ஷம் நாமம் முதலியனவாம்.

விபூதி.

விபூதி என்பது யாது?

புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை அக்கினியால் நீற்றி எடுக்கும்பொடியே விபூதியாம்.

விபூதியை வைத்துக்கொள்வதெப்படி?

புதுத் துணியால் வடிகட்டி மணமுள்ள புஷ்பங்களை இட்டுப் புதுப் பானைகளில் வைத்துக்கொண்டு அவசியத்திற்குத் தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்து வைத்துக்கொள்ளல்வேண்டும்.

விபூதி யணிவதன் அவசியமென்ன?

அசுத்தங்களைச் சாணம் அகற்றுவது யாவரும் கண்டறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள அசுத்தங்களை அகற்றவும் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும். சிரசிலுள்ள நீர்த்தோஷம் தலைவலி முதலியவற்றை அகற்றவும் இதுபயன்படுகிறது.

அன்றியும் இத்திருநீறு "முடிவில் யாவரும் பிடிசாம்பராவர்" என்ற உண்மையை நமக்கு உணர்த்தி "நீயும் இத்தகைய நீறாய்ச் சிறிது காலத்தக்குள் முடிவாய். ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும் இறைவன் மீது உற்றபற்றுடனும் இருத்தல்வேண்டும்" என நம்மையெச்சரிக்கின்றது.

பசுவின் மலம் நீருகிய பின்னரே ஜீவன் சிவனுகிருன் என்ற தத்துவத்தை யும் இது வெளிப்படுத்துகிறது. எனவே விபூதி மத சம்பந்தமாகவும் ஆரோக்கிய சம்பந்தமாகவும் பயன்படுதலின் நமக்கு இது இன்றியமை யாததாகும்.

விபூதியைத் தரிப்பதெப்படி?

வடக்கு முகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் நின்று பூமியில் விபூதி சிந்தாதபடி மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து சிவசிவ என்று சொல்லி சிவனைத் தியானித்துப் பூசுதல்வேண்டும்.

எப்போதெல்லாம் விபூதியணிதல் வேண்டும்?

காலை மாலை குளித்தவுடனும் பூஜைக்கு முன்னும் ஆலய வழிபாட் டிற்கு முன்னும் அணிதல் வேண்டும்.

விபூதியை நீரில் குழைத்துப் பூசுவது எங்ஙனம்?

சமய தீக்ஷை முறைப்படி விபூதி தரிப்பதுதான் தகுதியுடையது. எனினும் தீக்ஷை பெற்றுக்கொள்ளும்வரை விபூதியைத் தண்ணீரிலே குழைத்து,

"ஈசான மூர்த்தாய நம:" என்று சொல்லிச் சிரசிலும்,

"தத்புருஷவக்த்ராயநம:" என்று சொல்லி நெற்றியிலும்,

"அகோர ஹிருதயாய நம:" என்று சொல்லி மார்பிலும்,

"வாமதேவகுஹ்யாய நம:" என்று சொல்லிக் கொப்பூழிலும்,

"ஸத்யோஜாத மூர்த்தயே நம:" என்று சொல்லிப் புஜங்களிலும், கைமூட்டுகளிலும், மணிக்கட்டுகளிலும், இடுப்புகளிலும், கால்மூட்டு களிலும் தரித்துக்கொள்ளுதல்வேண்டும்.

விபூதி பூசியபின் யாது செய்யவேண்டும்?

ஸ்ரீபஞ்சாட்சரமாகிய 'ஓம் நமசிவாய' என்றமந்திரத்தினைப்பலமுறை ஜபித்துக் கடவுளை வணங்கவேண்டும்.

உருத்திராட்சம்.

உருத்திராட்சம் என்ருல் என்ன?

சிவபெருமானது மூன்று திருக்கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றியதாக எண்ணிச் சிவனடியார்கள் அணிந்துகொள்ளும் மணிக்கு உருத்திராட்சம் என்று பெயர்.

உருத்திராட்சத்தின் பெருமைகள் யாவை?

நல்ல உருத்திராட்சத்தை உரைத்துப்பார்த்தால் பசும் பொன்னின் மாற்றிருக்கக் காணலாம். இதனுள் மக்கள் உடலுக்கு நன்மை பயக்கும் சில பொருள்கள் இருக்கின்றனவென்றும் இதனை உரைத்து மருந்தோடு கலந்து குடித்தால் பல நன்மைகள் உண்டாகின்றனவென்றும் மருத்துவ நிபுணர்கள்கூறுகின்ருர்கள். இவற்றிலிருந்து உருத்திராட்சம் உடலுக்குப் பல நன்மை பயக்கின்றது என்று விளங்குகின்றது. உருத்திராட்சத்திற் பட்டு உடலிற் பாயும் நீர் மிகவும் புனிதமானது.

"இலங்கு மாமணி உருத்திர அக்கம் ஒன் றணியில்
விலங்கெ யிற்றுவெம் பூதங்கள் முதலிய மேவா"

என்றபடி உருத்திராட்சம் அணிபவரை எவ்வித உபாதிகளும் வந்தடைய மாட்டா.

உருத்திராட்சத்தில் எத்தனை வகையுண்டு?

ஒருமுகமணி முதல் பதினாறு முகமணி வரையுண்டு கழுத்தில் முப்பத்திரண்டு மணிகளை ஒருங்கு சேர்த்து மாலையாக அணியலாம். மார்பில் நூற்றெட்டுப் பொடிமணிகளை மாலையாகக் கோத்து ஜபத்திற்கும் பயன்படும்படி தரித்துக்கொள்ளலாம்.

சந்தனம் அணிவதேன்?

சந்தனம் மிகக் குளிர்ச்சியுடையதும் மணமுடையதுமாகும். அஃது உடலிலுள்ள வெப்பத்தை நீக்கித் தண்மையைத் தந்து உற்சாகத்தை உண்டுபண்ணுகிறது. பல நரம்புகள் புருவ மத்தியில் ஒன்று கூடுவதால் அவைகட்கு வெப்பம் ஏற்படாதிருக்கக் குளிர்ச்சியையுடைய சுகந்த திலகம் அணிதல் வேண்டும். பரமசிவனது நெற்றிக்கண்ணை நினைப்பூட்டுவதற்கும் அடியார்கள் திலகம் அணிந்துகொள்ளுகின்றனர்.

நாமம் அணிவதேன்?

நாமம் ஒருவகைத் திருமண்ணால் இடப்படுவது. எல்லாம் முடிவில் மண்ணய்விடும் என்பதை இது உணர்த்துகின்றது. அன்றியும் இறைவனது திருவடியல்லாது உயிர்களுக்கு வேறு கதியில்லை என்பதை உணர்த்தத் திருமாலின் திருவடியின் சாயலாய்த் திருமாலடியார்கள் இதனை இடுகின்றார்கள்.

எனவே இந்துமதச் சின்னங்களாகிய விபூதி, உருத்திராட்சம், சந்தனம், நாமம் முதலியவற்றில் எவற்றையேனும் இந்துக்கள் ஒவ்வொருவரும் அணிந்து இறைவன் திருவடிக்கு ஆளாகவேண்டும் என்பது பெறப்படும்.

—இந்துசாதனம்.

ஆணவமலம் எண்ணிறந்த ஆன்மாக்களையும் எண்ணிறந்த சத்தியால் மறைக்கும்.

(சுதுமலை, சிவஸ்ரீ, ச. பொன்னுஸ்வாமி குருக்களவர்கள்.)

ஆன்ம வர்க்கப் பொதுவகையுள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என மூவகைப்பட்டு நின்ற வேறுபாட்டுக்கு ஏது என்னவென்று பார்த்தால், அது பொதுநோக்குக்கும் இனிது புலனும். விஞ்ஞானகலரை ஆணவமலமாத்திரம் பந்தித்து நிற்க, ஏனைக் கன்மமாயைகள் அநாதியே பந்தியாவாயின. பிரளயாகலரை ஆணவமலமுங் கன்ம மலமும் பந்தித்துநிற்க, மாயாமலம் பந்தியாதொழிந்தது. சகலரை ஆணவமல கன்மமல மாயா மலங்கள் மூன்றும் அநாதியே பந்திப்பவாயின. இந்த மூவகையுயிரும் அநாதியே பந்த

வேறுபாடுடையராயிருக்கப் போதிய நியாயம் வேண்டுமல்லவா? அந்த நியாயமென்ன? விஞ்ஞானகலர் இயல்பாகவே ஆற்றலு மறிவும் மிக்குடையராயிருந்தமையால் அவரைக் கன்ம மாயைகள் பந்திக்க வலிபெறுவாயின. பிரளயாகலர் அவரிற் குறைந்த ஆற் றலுமறிவும் உடையராயிருந்தமையால் அவரை ஆணவமலத்தோடு கன்ம மலமும் பந்திக்கலாயிற்று. ஆயினும் மாயை அவரைப்பந்திக் கும் ஆற்றல் பெற்றிலது.

சகலர் மிகக் குறைந்த ஆற்றலும் அறிவுமுடையராயிருந்தமை யால் அவரை மும்மலங்களும் பந்தஞ் செய்யலாயின. மாயை கன்மங்களின் மயங்காத வியல்பும் அவற்றை வெல்லுமாற்றலும் மாயை கன்மங்களினியல்பறியும் விஞ்ஞானகலர்க்கு இயற்கை யாகவேயிருந்தன. அவ்வாறே மாயையினியல்பையறியு மறிவும் அதன் ஆற்றலைவெல்லுமாற்றலும் பிரளயாகலர்க்கு இயல்பாகவே யிருந்தன. சகலர்க்கு அவ்வித ஆற்றலும் அறிவும் இல்லாமையால் மும்மலங்களினாலும் அவர் பாதிக்கப்படலாயினர். விஞ்ஞான கலர் பிரளயாகலர் சகலர் என்னும் பேதம் அநாதியேயிருந்ததற்குக் காரணம் இதுவேயாம். இன்னும், மூவகை யுயிர்வர்க்கத்தையு மறைக்கும் ஆணவமல மொன்றேயாயினும் அவ்வொரே மலம் யாவரையும் ஒரே வகையாய் மறைப்பதில்லை. ஆணவமலம் விஞ் ஞானகலரைச் சூக்குமமாகவும், பிரளயாகலரைத் தூலமாகவும், சகலரைத் தூலதரமாகவும் மறைக்கும். தூலதரம்—மிகத் தூலம். மலம் ஒன்றாயிருந்தும் அதன் மறைப்பு ஒரே தன்மையாயிராமல் மூவகைப்படலானதன் காரணம் ஆன்மவர்க்கத்திலுள்ள பேதமே யாம். மலமாயை கன்மங்கள் மூவகையுயிர் வர்க்கங்களுக்கும் உள் ளனவாகவும் அவருள் ஒருவகையார் ஒன்றின் மயங்க மற்றொரு வகையார் அதின் மயங்காதிருப்பாரானால், மயங்கியும் மயங்காமலு மிருக்கும் இருவகையாரையும் ஒரேவகையாரென்று சொல்வதெங் ஙனம்? இவ்வாறு மும்மலங்களிலும் சார்பு பெற்றிருந்தும் அதின் மயங்குதல் மயங்காமையாகிய வேறுபாடு அநாதியே யிருத்தலால் அவ்வேறுபாட்டுக்கும் ஏதுவாய மூவகையியற்கையும் அநாதியே யுண்டென்பது சொல்லாதேயமையும். பொதுமையின் மூவகையா யெண்ணப்படும்பேதம்போலச் சிறப்புவகையானே தனித்தனியான பேதங்கள் ஒவ்வோரான்மாவிலும் உள்ளதுஎன்றுஅறியக்கிடக்கின் றது. மலசத்தி மூவகையுயிர்களையும் சூக்குமமாயும் தூலமாயும் தூலதரமாயும் மறைத்தல் போலச் சிறப்புவகையிலும் தனித்தனி யானபேதம்பட மறைக்கும். அதுபற்றியே ஆணவமலம் எண் ணிறந்த ஆன்மாக்களையும் எண்ணிறந்த சத்தியான்மறைக்கு மென்று சாஸ்திரங்கள் கூறும்.

ஸிந்துவும் ஹிந்துவும்.

(சைவத்திருவாளர், அ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள்.)

ஹிந்துவென்பது ஒருமதப்பெயர். அப்பெயர் ஸிந்துவென்பதன் மாற்றமென்பர் சிலர். அப்படியானல் ஸிந்துவென்ற மாறாத பெயரும் அம்மதத்துக்கு வழக்கத்தில் இருந்திருக்கவேண்டும். ஸிந்துமதமென்ற பெயரை யாரேனும் எங்கேனும் என்றேனுங் கேட்டது கிடையாது. மாறிய பெயர் மட்டில் வழக்கத்தில் வந்தது. அது விந்தையே. ஸிந்து தேசம் ஸிந்து (Sind) வாகவே இன்றுமிருக்கிறது. அது ஹிந்து (Hind) வாகமாறவில்லை. ஸிந்துவென்னும் நதிதான் (Indus) ஆயிற்று. அந்த இண்டஸ் ஆங்கிலர். அப்பதம் இண்டு அல்லது இந்துவாகவே மாறும். வடமொழியிலுள்ள மூன்றாவது நாலாவது 'த' வர்க்கத்தை ஆங்கிலேயத்தில் D Dh என்று எழுதவதுண்டு. ஆனல் ஹிந்துவாக அந்த இந்து மாறவேமாட்டாது. கடினவுச்சரிப்பே இலேசான வுச்சரிப்பாக மாறலாம். தமிழர் 'ஹிந்து'வையே 'இந்து'வென உச்சரிக்கின்றனர். இலேசானவுச்சரிப்புக் கடினவுச்சரிப்பாக மாறாது. ஆகவே 'இ' யானது 'ஹி' யாக மாறிற்றென்பது தப்பு. 'ஹ' சப்தங் கடினமுள்ளது. ஸிந்துவென்ற நதிப்பெயரை Sindu வென்று ஆங்கிலத்தில் எழுதலாம். அதிலுள்ள 'S' கடைசியில் வந்துவிட்டது. ஆகையால் அது Indus ஆனது. அதில் உள்ள எழுத்துக்கள் நீக்கப்படவில்லை. இல்லாத எழுத்துக்கள் புகுத்தப்படவில்லை. எந்த எழுத்துந் திரிக்கப்படவுமில்லை. ஆகவே ஸிந்துவென்பது இண்டஸ் ஆய்விட்டதனாலேயே ஹிந்துபதம் அதிலிருந்து உற்பத்தியாய்விட்டதென்றல் சொல்லாராயச்சி யாகாதென்க. ஸிந்துநதிப் பிரதேசத்தில் உண்டான மதமென்ற பொருளை வைத்துக்கொண்டால் அம்மதம் ஸைந்தவமத மென்று தானாகும். ஸைந்தவம் ஸிந்துவின் தத்திதாந்தம். ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வந்தபிறகு ஸிந்து நதி இண்டஸ் நதியாயிற்று. அவர்கள் வருவதற்கு முன் இந்நாட்டை ஆண்டவர் இசுலாமியர். அக்காலத்திலும் இந்நாட்டு மக்கள் ஹிந்துக்கள்தான். அவர் வருகைக்கு முன்பே பாரசீகர் ஹிந்துப்பட்

டத்தை இந்நாட்டினர்க்குச் சூட்டிவிட்டனர். அது சரித்திரப்பிரசித்தம். அப்பட்டம் பாரசீகபதம். திருடன் அடிமை கருப்பன் என்பதே அதற்கருத்தம்.

மாதொரு பாகனாரும் மற்றைத் தெய்வங்களும்.

சைவ சமயத் தெய்வம் சிவபிரான். அவரே பரதகண்டப் பூர்வீக மக்களனைவருக்குந் தெய்வம். பரதகண்டத் தெய்வமே அவர்தான். 'O, India! forget not that your ideal god is the great ascetic of ascetics, Umanath Sankar' என்றார் விவேகாநந்தரும். அவர் சைவரல்லர். சிவபரத்துவத்தை அவரே அப்படிச் சம்மதித்தார். சைவராயுள்ளபேர் இன்னும் எத்துணை வன்மையோடு அவ்வுண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும்? ஆனால் நடுக்கமுள்ள சில சைவர், சைவர்க்கே புளிக்குமாறு சிவபரத்துவப் பிரசங்கம் புரிகின்றனர். ஒவ்வொரு மதத்துக்கும் வழிபடு கடவுள் உண்டு; அக்கடவுளர் வணக்கங்களுஞ் சிவவணக்கமே; அதனாற் சைவர் எந்தத்தெய்வத்தையும் நிந்தித்தல் கூடாது; நிந்திப்பாராயின் அது சிவநிந்தையேயாகும்; எல்லாமதக் கடவுளருஞ் சிவனேயாவர்; 'யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகி யாங்கே - மாதொரு பாகனார்தாம் வருவர்' என்றது சித்தியார்; சைவம் மற்றமதங்களிடத்திற் பரந்த நோக்கமுடையது; அதற்கு அந்தப்பிரமாணமே சான்று என்பது அவராராய்ச்சி.

மதங்களின் வழிபடுகடவுளர், ஒரு மதமும் வழிபடாத கடவுளர், சைவசமய முழுமுதற் கடவுள் எனக்கடவுளர்வகை மூன்று. அவரெல்லாம் உள்பொருள்களே. முதலிருவகையினரும் இல்பொருள்களாயின் சைவசமயமுழுமுதற்கடவுளாகியசிவபிரானைத்தேவாதிதேவன் தேவதேவன் மஹாதேவன்பராபரன் என்ற பெயர்களால் எப்படி யழைக்கலாம்? அப்பெயர்களெல்லாம் அப்பிரானுக்கு வீண் சுமையா? இன்னும் அக்கடவுளரைச் சிவனென்று சொல்லுவது தான் மற்ற மதங்களின்மேல் வைத்த பரந்த நோக்கமோ? அக்கொள்கை காரணமாக மற்ற மதத்தினருக்குச் சைவத்தின்மேல் திருப்தி எற்பட்டுவிடுமா? அக்கொள்கைச் சைவரை மற்ற மதத்தினர் தட்டிக்கொடுப்பாரா? அக்கடவுளரனைவரும் வெவ்வேறான உள்பொருள்களே, ஆனாற் சிவபிரானுக்குரிய வியல்புகளிற் சிற்சில

அத்தெய்வங்கள் பால் ஆரோபிக்கப்பட்டு மதிப்படையலாயின வெனக் கொள்வதே உண்மைச் சைவமாகும்.

'யாதொரு......வருவர்' என்பது சித்தியாரிலுள்ள ஒரு திரு விருத்தத்தின் முதலிரண்டடிகளே. அவ்வடிகளை எடுத்தாள்பவரிற் பலர் அவற்றோடு நின்றுவிடுவர். பின்னிரண்டடிகளை அவர் தொடுவதில்லை. அவை அந்நடுக்கச் சைவரின் அவ்வழவழப்பாராய்ச்சிக்குச் சத்துரு. அவற்றையுந் தொட்டுப் பிரசங்கிப்பதற்கு ஆண்மை வேண்டும். 'மற்றைத் தெய்வங்கள்-வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையுஞ் செய்யு-மாதலா லிவையிலாதா னறிந்தருள் செய்வ னன்றே' என்பனவே அவ்வடிகள். அச்சைவரின் ஆராய்ச்சிப்படி அத்தெய்வங்கள் இல்பொருளாகவோ சிவனாகவேயோ இருக்குமாயின் அவ்வில்பொருள்களை அல்லது அச்சிவனை வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையுஞ் செய்யும் என்று அவ்வடிகள் ஏன் நிந்திக்கவேண்டும்? ஆகையால் அத்தெய்வங்களின் உண்மை பன்மை எளிமை, சிவபிரானின் முதன்மை ஆகிய அனைத்தும் அத்திருவிருத்தத்துள் விளங்கவைக்கப்பட்டிருக்கின்றன வென்க. ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் கருத்து வகை என்றுகோடல்வகை என்னும் வகைபாடுகளுடன் அத்திருவிருத்தத்துக்குச் செய்தருளிய திவ்வியார்த்தத்தைக் கண்டு அந்நடுக்கச்சைவர் தம் புத்தியைத் திருத்திக் கொள்ளுக.

வியாஸர் சுகரைப் பெற்றது.

(பொன்னேரி, சிவபாத்துவ கிருபண சிகாமணி திரு, தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள்.)

(பீஷ்மப் பிரசங்கம்)

சாந்தி பர்வம் 331, 332வது அத்தியாயங்களிற் கண்டது.

"முன் காலத்தில் மேருவின் சிகரத்தில் மகாதேவர் விளையாடிக் கொண்டிருந்தார். தேவியும் அங்கே இருந்தாள். அவ்விடத்தில் கிருஷ்ணத்வைபாயனர் சிறந்த தவத்தைச் செய்துகொண்டிருந்தார். அவர் ஈஸ்வரனிடம் புத்திரனுக்காகத் தவம் செய்தார். ஓ! விபுவே! அக்னிக்கும் பூமிக்கும் அப்புவுக்கும் வாயுவுக்கும் ஆகாயத்திற்கும் ஒப்பான வீர்யமுள்ள புத்திரன் எனக்கு உண்டாகவேண்டும்' என்கிற ஸங்கற்பத்தோடு தவத்தை மேற்கொண்டு மகாதேவரைப் பிரார்த்தித்தார். வ்யாஸ முனிவர் புத்திரனுக்காகச் சலியாமல் யோகத்திலிருந்தார். மூவுலகங்களுக்கும் ஆச்சரியமா

யிருந்தது. அவருடைய இவ்விதத் தவத்தாலும் பக்தியினாலும் மஹேஸ்வரர் மனத்தில் திருப்தியுற்று அனுக்கிரகம் செய்யலானார். மகாதேவர் அவருக்கு அம்பிகையோடு பிரத்யக்ஷமானார். முக்கண்ணர் அவரைநோக்கி 'த்வைபாயனரே! அக்கினியும் வாயுவும் பூமியும் ஜலமும் ஆகாயமும் போலச் சுத்தனும் மஹானுமான புத்திரன் உண்டாவான். உம்முடைய புத்திரன் பிரம்ம பாவத்தை த்யானிக்கிறவனும் ப்ரம்மத்தில் உறுதியுடையவனும் பிரம்மத்தினிடம் ஆதரவுள்ளவனும் ப்ரம்மத்தை ஆஸ்ரயமாகவுடையவனுமாகித் தேஜஸால் மூவுலகங்களையும் வியாபிக்கச்செய்து கீர்த்தியை அடையப் போகிறான்' என்று சொன்னார். அந்தவ்யாஸர், சங்கரரிடமிருந்து உத்தமமான வரத்தையடைந்து பிறகு அக்கினியையுண்டுபண்ணவேண்டுமென்கிற விருப்பத்தால் அரணியை எடுத்துக் கடைந்தார். அந்த அரணியில் சுகர் உண்டானார். மிக்க காந்தியுடையவரும் மகாத்மாவுமான ஈஸ்வரர்தேவியோடு கூடத்தாமாகவே பிரீதியுடன் அந்த வ்யாச முனிவருடைய புத்திரருக்குப் பிறந்தவுடனே விதிப்படி உபநயனம் செய்வித்தார்.''

வியாஸருக்குச் சிவாநுக்கிரகம்.

(பீஷ்மப் பிரசங்கம்)

சாந்திபர்வம் 341-வது அத்தியாயத்திற் கண்டது.

''சுகர் பரமபதத்தை அடைந்தார். வ்யாஸ முனிவர் புத்திரருடைய முக்தியையும் தம்முடைய பற்றுதலையுமறிந்து ஸந்தோஷத்தையும் லஜ்ஜையையும் அடைந்தார். பகவான் சங்கரர் அவரை அடைந்தார். அப்பொழுது மஹாதேவர், புத்ரசோகத்தால்தாபத்தையடைந்தஅந்த வ்யாஸரைநோக்கி, 'முன் காலத்தில் நீர் வீரியத்தால் அக்னி, பூமி, அப்பு, வாயு, ஆகாயமிவைகளுக்கு நிகரான புத்திரனை என்னிடம் வரித்தீர். அப்படிப்பட்ட லக்ஷணத்துடன் உமக்குப் பிறந்தவனான அந்தப் புத்திரன் உம்முடைய தவத்தினாலும் என்னுடைய அனுக்கிரகத்தினாலும் நன்றாக நிரம்பினவனும் பிரம்மதேஜோமயனும் சுசியுள்ளவனு மானான். அவன் பரமமான கதியை அடைந்தான். ஓ! பிரம்மரிஷியே! அவனைக் குறித்து நீர் என் துக்கிக்கிறீர். உமக்கும் புத்திரனுக்கும் அழிவற்ற கீர்த்தியானது உண்டாகும். ஓ! மகா முனிவரே! நீரும் என்னுடைய அனுக்கிரஹத்தால் இந்த உலகத்தில் எங்கும் எப்பொழுதும் உம்மைவிட்டு விலகாத உம்முடைய புத்திரனுக்குச் சமமான நிழலைப்பார்ப்பீர்' என்று சொன்னார். அந்த முனிவர் பகவானான ருத்திரரால் நேரில் ஸமாதானம் செய்யப்பட்டுச் சாயையைப் பார்த்துக்கொண்டே பரமஸந்தோஷத்தோடு திரும்பினார்.''

வியாகரணம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் 20-10-32 இரவு விரிவாக ஓர் உபந்யாசம் செய்தார்கள். அதன்சாரம் வருமாறு:—

வேதபுருஷனுக்கு அங்கங்களாகிய ஆறுக்குள் வியாகரணம் என்பது முகம். முகம் என்பதற்கு சம்ஸ்கிருதத்தில் வாய் என்றும் ஓர் அர்த்தம் உண்டு. ஆகவே வியாகரணம் வாக்குஸ்தானமாகும். வாய் சரியாக இல்லாதவன் உளறுதலைப்போல வியாகரணம்தெரியாதவன் உளறுவான். இந்த வியாகரண சாஸ்திரம் ஆறு சாஸ்திரம் என்னும் ஒருவகைப் பிரிவிலும் சேர்ந்திருக்கிறது.

பழையகாலத்தில் வியாகரணம் சொல்லிக்கொடுப்பவர்களுக்குத் தனியாகவே மான்யங்கள் கொடுத்துவந்தார்கள். தெலுங்கதேசத்தில் உள்ள வேங்கிநாட்டுத் தாமிரசாஸனம் ஒன்று, பம்பாயில்வெளியிடப்படும் காவ்யமாலையில் வந்துள்ள பிராசீன லேகமாலையென்னும் புஸ்தகங்களில் ஒன்றில் வெளியிடப் பட்டிருக்கிறது. அதில் குலோத்துங்க சோழனென்பவன் தமிழ்நாட்டிலிருந்து 500 பிராமணர்களைக் கொண்டுபோய் அந்த நாட்டிற்குடியேற்றி அவரவர்களுக்கு வேண்டியமான்யங்களை அளித்தான் என்ற செய்தி காணப்படுகிறது. அவர்கள் வேத சாஸ்திரங்களைப் பிறருக்குப் பயிற்றுவித்துக்கொண்டு வருவதற்காக அந்த மான்யத்தைப் பெற்றார்கள். பலவகைச் சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுக்கும் சக்தி வாய்ந்தவர்கள் அந்த 500 பிராமணர்களும். அவர்களில் ஒவ்வொருவருடைய பெயர், கோத்திரம், தெரிந்த வேதம் சாஸ்திரம், கொடுக்கப்பட்ட மான்யம், அதன் எல்லைகள் முதலிய பல விவரங்கள் அத்தச் சாஸனத்திற் காணப்படுகின்றன. அதில் ரூபாவதாரம் என்னும் வியாகரணசாஸ்திரத்தைச் சொல்லிக்கொடுப்பவர்களுக்குத் தனியாக ஒருபாகம் அதிகமாகக் கொடுக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் உள்ள பிராமணர் பெயர்களிற் பல தமிழ்ப்பெயர்களாக இருக்கின்றன. அம்பலக் கூத்தாடுவான் பட்டன், திருவரங்கமுடையான் பட்டன் என்பவற்றைப் போன்ற பலபெயர்கள் அதில் வருகின்றன. அம்பலக்கூத்தாடுவானென்பது நடராஜாவின் பெயர் திருவரங்கமுடையான் பட்டனென்பது வைஷ்ணவர்பெயரன்று. அந்தக் காலத்தில் வைஷ்ணவவகுப்புத் தனியாக இல்லை; ஸ்மார்த்தர்களில் சிவபக்தி யுடையவர்களும் விஷ்ணுபக்தி யுடையவர்களும் இருந்தார்கள். இப்பொழுதும் வடதேசத்திலும் மலையாளத்திலும் விஷ்ணு கோயில்களில்

ஸ்மார்த்தர்கள் பூஜை செய்கின்றனர். திருவரங்கமுடையானென்பது ரங்க ஸ்வாமி என்பதே. உடையான்—ஸ்வாமி.

வியாகரணத்துக்கு, சூத்ரம் செய்தவர் பாணினி என்பவர். அவருடைய சூத்திரத்திற்கு வார்த்திகம் செய்தவர் வரருசி. அதற்குப் பாஷ்யம் செய்தவர் பதஞ்சலி மகரிஷி. மற்ற சாஸ்திரங்களில் வார்த்திகம், பாஷ்யம் முதலியவற்றைவிட சூத்ரத்திற்குத்தான் பெருமை அதிகம்.

வியாகரணத்தில் சூத்ரத்தை விட வார்த்திகத்துக்கு மதிப்பு அதிகம். அதைவிட பாஷ்யத்துக்குப் பெருமை அதிகம். மற்ற சாஸ்திரங்களின் பாஷ்யத்தை ஒவ்வொரு குறிப்போடு சொல்வது வழக்கம். வியாகரண பாஷ்யத்தை மஹாபாஷ்யம் என்றே சொல்லுவார்கள். அதனுல் அதனுடைய பெருமை நன்ருகப்புலப்படுகிறது.

அப்பைய தீட்சிதரவர்களுடைய சிஷ்யராகிய பட்டோஜி தீட்சிதரென்பவர் பாணினீய சூத்ரத்திற்கு வியாக்யானமாக சித்தாந்த கௌமுதி என்ற ஒரு புஸ்தகம் பண்ணியிருக்கிருர். அது இந்தக்காலத்தில சம்ஸ்கிருத வியாகரணம் படிக்கிறவர்களால் முதலிற் படிக்கப்படுகிறது. சூத்ரத்தில் பதங்கள் அதிகமாக இருந்தாலும் கௌமுதியில் கொஞ்சம்கூட அதிகமாக இராமற் கணக்காக இருக்கும். அந்தக்கௌமுதிக்கு முன்பு பிரசாரத்தில் இருந்தது முன்பு சொன்ன ரூபாவதாரம் என்னும் வியாகரண சாஸ்திரம். ரூபம் என்பது சப்தங்களின் உருவம். அவதாரமென்பது இறங்குதல் அதாவது வரலாறு.

சிவன்கோவில்களில் வியாகரணதான மண்டபம் என்ற ஒருவகை மண்டபம் உண்டு. திருவொற்றியூரில் அப்படிப்பட்ட மண்டபம் ஒன்றிருக்கின்றது. சோழநாட்டிற் பல கோயில்களில் அது இருக்கிறது. ஏன் சிவன்கோவிலில் வியாகரணதான மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது? வியாகரணத்துக்கு மூலபுருஷர் ஸ்ரீ நடராஜமூர்த்தி. ஆகையால்தான் சிவன்கோயிலில் அம்மண்டபம் இருக்கிறது.

ஒரு சமயம் நடராஜா தாண்டவமாடுகையில் பக்கத்தில் சனகாதிகளும் தேவர்களும் பதஞ்சலி வியாக்கிரபாதர்களும் பாணினி மகரிஷி முதலானவர்களும் அதனைத் தரிசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கண்ணுக்கு அந்தத் தாண்டவத்தைப் பார்க்கும் சக்தி உண்டு. அவர்களுடைய பார்வை பலகாலம் தவம்பண்ணிய பயனுகக் கிடைத்தது. அதனைத்திவ்ய திருஷ்டி என்று சொல்வார்கள். பாரதயுத்தத்தில் பகவான் கிருஷ்ணனுடைய விசுவரூபதரிசனத்தைச் செய்யும் சக்தி சஞ்ஜயனுக்கும்அர்ச்சுனனுக்குமே உண்டாயிற்று. சஞ்சயன் ஸ்ரீ வியாசரிடத்திலும் அர்ச்சுனன் பகவானிடத்திலும் அந்தத்திவ்ய திருஷ்டியைப் பெற்ருர்கள்.

நமக்குத்தோன்றும் வஸ்துக்களுடைய ஸ்வரூபங்களெல்லாம் நம்முடைய கண்ணைப்பொறுத்து இருக்கின்றன. கண்ணில் உள்ள லென்ஸ் என்னும் ஒருகருவியால் பார்க்கிறோம். நமக்கு ஒருவஸ்து ஒரு சாணுள்ளதாகத் தோன்றுகிறது. நம்முடைய கண்ணிலுள்ள லென்ஸ் வேறுவிதமாக இருந்தால் அதே ஒரு முழமாகவும் தோன்றலாம். ஆகையால் நாம் பார்ப்பது நிசப்பார்வை என்று எண்ணமுடியவில்லை. இதைத்தான் வேதாந்தம் திருஷ்டி சிருஷ்டி வாதம் என்றுசொல்கிறது.

சனகாதி மகரிஷிகளுக்கு ஸ்ரீநடராஜ தரிசனம் செய்வதற்குரிய சக்தி இருந்தது. அவர்கள் ஆனந்தமாகத் தரிசித்துக் கொண்டிருந்தார்கள்.

தாண்டவம் நிற்கின்ற சமயத்தில் அவருடைய கையில் இருந்த டமருகத்திலிருந்து இருபத்துநான்கு சப்தங்கள் உண்டாயின. வாத்தியங்களுக்குள் தோல்வாத்தியங்களில் முடிக்கும்பொழுது சாப்புக் கொடுப்பதுண்டு. அதாவது சேர்ந்தாற்போலச் சில அடிகள் அடிப்பது. அதுபோல நிருத்தனத்தின் முடிவுசமயத்தில் டமருகத்திலிருந்து 24 சப்தங்களெழுந்தன. அந்தச் சப்தம் சனகாதி முனிவர்கள் ஆனந்தமடையும் பொருட்டு எழுந்தன: அந்தச்சப்தங்களை வைத்துக்கொண்டு சிவபக்தி சூத்ரம் என்று நந்திதேவர் ஒருகிரந்தம் செய்தார். அப்பொழுது பக்கத்தில் இருந்த பாணினி மகரிஷி அந்தச்சப்தங்களை மூலமாகவைத்துக்கொண்டு எட்டுஅத்தியாயங்களால் ஒரு வியாகரணம் எழுதினர்.

பாணினியினுடைய சரித்திரம் கதாசரித்சாகரம் என்னும் புஸ்தகத்திற் சொல்லப் பட்டிருக்கிறது. பாடலிபுத்ரத்தில் இருந்த வாஷேய உபாத்தியாயர் என்பவரிடத்தில் வரருசியும் பாணினியும் படித்துவந்தார்கள். பாணினிக்கு ஒன்றும் ஏறவேயில்லை. ஹிமாசலத்துக்குப் போய்த் தபஸ்செய்யும்படி அந்தக்குரு பாணினியைஅனுப்பிவிட்டார். அவர்சென்று தவம்புரிந்து ஈசுவரதரிசனம் பெற்றார். பின்பு நடராஜாவுடைய தாண்டவத்தைப் பார்க்கும் சக்தியைப் பெற்றார். அப்படிப் பார்க்கிறபொழுது எழுந்த சப்தத்திலிருந்து வியாகரணத்தை எழுதினர். நடராஜாவினுடைய டமருகத்திலிருந்து எழுந்த சப்தத்திற்கு மாகேசுவர சூத்ரம்என்று பெயர். (டமருகம்-உடுக்கை)

அந்தச் சூத்ரங்களைப் பாணினியானவர் எவ்வாறு பிரயோஜனப்படுத்திக்கொண்டார்? சில சம்ஞைகளை அந்தச் சூத்ரத்திலிருந்து அமைத்துக் கொண்டார். மெய்யெழுத்துக்கள் சொல்லப்படுகையில் ஹ என்பது அதில் முதலில் இருக்கிறது. கடைசியில் ல் என்பது இருக்கிறது. முதலும் கடைசியும் சேர்த்து ஹல் என்றால் அது இடையிலே உள்ள எல்லா மெய்யெழுத்துக்களையும் குறிக்கும். அப்படியே அச்சென்பது உயிரெழுத்துக்

களைக் குறிக்கும். சூத்ரத்தின்முதலில் இருக்கும் அகாரத்தையும் கடைசியி லுள்ளதையும் சேர்த்தால் அல் என்று ஆகிறது. அது எழுத்தையெல்லாம் குறிக்கிறது. எழுத்துக்களின் வரிசையைக் குறிக்கும் ஆல்படெட் என்னும் இங்கிலீஷ்வார்த்தை அதிலிருந்துதான் வந்தது. இந்துஸ்தானியில் ஆரம்ப எழுத்தாகிய அலீப் என்பதும் கிரேக்கில் உள்ள ஆல்பா என்பதும் அல் என்பதிலிருந்தே வந்தவை. எழுத்துக்களையெல்லாம் குறிக்கும் அந்தப் பெயர் எழுத்துக்களுக்குள் முதலிலுள்ளதைக் குறிக்க வந்துவிட்டது.

இப்படி வியாகரண சூத்ரத்திற்கு மூலமாயிருந்தவர் நடராஜமூர்த்தி.

சற்றேறக்குறைய 400 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூரில் ரகுநாத நாயக்கர் என்பவர் அரசாண்ட காலத்தில் செய்யப்பட்ட ஒரு காவியத்தை நான் பார்க்கநேர்ந்தது. அதில் வியாகரணத்துக்குக் காரணன் பரமேசு வரன் என்பது மிகவும் அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. சப்தங்களின் வேதமாகிய வியாகரண சாஸ்திரத்தைக் கையை ஆட்டினதால் நீ பண்ணி ஞய் காலைஆட்டி அதற்குப் பாஷ்யத்தை உண்டாக்கினுய் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

கையை ஆட்டியதாவது கையிலுள்ள டமருகத்திலிருந்து சப்தத்தை உண்டாக்கியது. அது பாணினியினது சூத்ரத்துக்கு ஆதாரமாயிற்று. பகவானுடைய காலில் பாதசரமாக இருப்பவர் ஆதிசேடன் அவருடைய அவதாரமே பதஞ்சலிமகரிஷி. அந்தப் பதஞ்சலிதான் வியாகரண பாஷ் யம் செய்தவர். ஆதலால் காலை ஆட்டிப் பாஷ்யத்தை உண்டாக்கினுய் என்றுர்.

இப்படி சப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் மூலமானவன் நீயே என்று சொல்லி அந்தக்கவி சுலோகத்தைப் பூர்த்தி செய்திருக்கிறுர்.

ஒரு ஸ்தலத்துக்கு நான் போயிருந்தபொழுது நடராஜாவினுடைய உருவம் ஒரு சுவரில் எழுதியிருப்பதைப் பார்த்தேன். அதற்கருகில் பதஞ் சலி வியாக்கிரபாதர்களுடைய உருவம் எழுதப்பட்டிருந்தன. வியாக்ர பாதருக்கு அடியில் அவருடைய பெயர் எழுதப்பட்டிருந்தது. பதஞ்சலிக் குக் கீழே எழுதினவன் தெரியாமல் பதஞ்சொல்லி என்று எழுதியிருந் தான். பதம் என்பது வியாகரணத்துக்கு ஒரு பெயர். வியாகரணத்தைச் சொன்னவர் என்று அதற்கு அர்த்தமாயிற்று. ஆகவே அந்தப் பெயர் அவ ருக்குப் பொருத்த முடையதாகவே யிருந்தது. வியாகரண பாஷ்யம் செய்தவர் அவரல்லவா? அறியாமையில் கூட ஒரு தத்வம் இருக்கிறதே என்று அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டேன்.

வியாகரண சாஸ்திரம் பிரசாரம் அடைந்ததற்கு மூலகாரணம் பர மேசுவரன். ஆகையால் அவருடைய கோயிலில் வியாகரணதான மண்ட பங்கள் அமைக்கப்பட்டன என்று சுவாமிகள் சொல்லி முடித்தார்.

சுதேசமித்திரன்.

உ

மணி ஐயர்.

(சென்னை, மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள்.)

சகோதரர்கள்:

மணிஐயருடைய தந்தையாராகிய சுப்பையரென்பவர் இராமநாதபுரம் ஸம்ஸ்தானத்தில் 'மானேஜ'ராக இருந்த பொன்னுஸாமித் தேவரிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். தேவருக்கு அவரிடம் மிக்க அன்பும் நம்பிக்கையும் உண்டு. அவருடைய பெருந்திறமையைக் கண்டு அவருக்குப் பொன்னுசாமித் தேவர் ஒரு பெருந்தொகையை ஒரு சமயத்தில் நன்கொடையாக அளித்தார். அதனை சுப்பையர் தம் குடும்பத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளாமல் அதைக்கொண்டு மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசர் கோயிலில் ஒரு வேத பாடசாலையை ஏற்படுத்தினார். இன்னும் அது நடைபெற்று வருகின்றது.

சுப்பையருக்குக் குமாரர்கள் மூவர். முதல்வர் இராமசாமி ஐயரென்பவர். இரண்டாவர் சங்கரைய ரென்பவர். மூன்றாவரே சுப்பிரமணிய ஐயர்.

இவர்களுள் இராமசாமி ஐயர் சிலகாலம் தாசில்தாராக இருந்தார். பிறகு ஹுஜூர் சிரஸ்தேதாரானார்.

சங்கரைய ரென்பவர் மிக்க தைரியமும் சாமர்த்தியமும் உடையவர். அவர் சிவகங்கை ஸம்ஸ்தானத்திலும், இராமநாதபுரம் சமஸ்தானத்திலும் சிறந்த உத்தியோகங்களைவகித்து விளங்கியவர்; ஏழை ஜனங்கள்பால் இரக்கமுடையவர்; பெருங்கொடையாளி. தம்முடைய தமையனாரும் தம்பியும் சம்பாதிக்கும் பொருள்களை உசிதமாகவும் தாராளமாகவும் செலவிட்டு வந்தவர். அவ்விருவருக்கும் குடும்பக் கவலையே உண்டாகாதபடி பார்த்து வந்தார். அவருக்கு இராமநாதபுரம், மதுரை முதலிய இடங்களில் மிக்க செல்வாக்கு இருந்து வந்தது.

மணி ஐயர் மதுரையிலே பிரபலமாக இருந்த காலத்தில் அவர் வைத்திருந்த பெட்டியொன்று காணாமற் போயிற்று. அதில் ஒரு முக்கியமானவழக்கின்சம்பந்தமானபத்திரங்கள் இருந்தன. அதனால் மணிஐயர் சிறிது கலக்கமுற்றார். சங்கரையரிடம், "அண்ணா, நான் என்ன செய்வேன்?" என்று விஷயத்தைத் தெரிவித்தார். அவர் மணி ஐயரைத் தேற்றி, "நீ கவலைப்படவேண்டாம். அப்பெட்டி

எங்கே போயிருந்தாலும் வருவித்துத் தருகிறேன்" என்று தைரியம் கூறினர்.

'யாரோ திருடிக்கொண்டு சென்றுவிட்டதை இவர் எப்படி வருவிப்பார்?' என்று மணிஐயர் எண்ணினர்.

சங்கரையருக்கு அப்பக்கங்களிலுள்ள மறவர்களும் கள்ளர்களும் பழக்கமானவர்கள். அவர்கள் அவரிடத்தில் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். தம்முடைய தம்பியின் பெட்டி களவுபோய்விட்டதை அவ்விருவகுப்பாரிலுமுள்ள தலைவர் சிலரிடம்அவர் சொன்னர். அடுத்த நாளே பெட்டி சங்கரையரிடம் வந்துவிட்டது. 'எங்கேயிருந்து எப்படி வந்தது?' என்று யாருக்கும் தெரியவில்லை. அவர் அந்தப்பெட்டியைத் தம்பியிடம் கொடுத்து, "ஏதாவது பெட்டியிலிருந்துஎடுக்கப்பட்டிருக்கிறதா? பார்" என்றார். மணிஐயர்பார்த்தார். எல்லாப் பொருள்களும் முன் இருந்தபடியே இருந்ததைக் கண்டு அவர் அளவற்ற ஆச்சரியங் கொண்டார்.

மணி ஐயருக்குத் தம் தமையன் மார்களிடமும் அவர்களைச் சார்ந்தவர்களிடமும் என்றும் குறையாத அன்பு இருந்துவந்தது. சங்கரையர் காலமானபோது மணிஐயர் மிக வருந்தினர். "நான் இதுவரையிலே குடும்பபாரம் இன்னதென்று தெரியாமல் வாழ்ந்து வந்தேன்; எல்லாவற்றையும் அண்ணுவே கவனித்துவந்தார். இனிமேல் குடும்பக்கவலை என்னைச்சார்ந்து விட்டது" என்று கூறிக் கலங்கினர்.

தம்முடைய பந்துக்களைப் பாதுகாப்பதில் மணி ஐயர் மிகச் சிறந்தவர். அவர், பொருளைத் தமக்காகச் சம்பாதிக்கவில்லை; யாவருக்கும் பகிர்ந்து கொடுத்து அவர்கள் இன்புறுவதைப் பார்த்து மகிழ்வதே தம் கடமையாகக் கொண்டிருந்தார். தாம் செய்யும் உதவிகளைப் பிறர் அறியாதபடி செய்வார்.

மதுரை நிகழ்ச்சிகள்:

மணி ஐயர் 1842-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி பிறந்தார். இளமையிலே கல்விப்பயிற்சியைப் பெற்றூர். சிறு பிராயத்தில் ஒரு தையற்காரர் அவருக்கு இங்கிலீஷ் எழுத்துக்களைக் கற்றுக்கொடுத்தாராம்.

அவர் சில பாடசாலைகளிலே கல்வி பயின்றூர். வருஷந்தோறும் அவர் தம்முடைய கல்வித்திறமையினுல் பரிசுகள் பெற்று வந்தார். மதுரையில் இருந்த பள்ளிக்கூடத்தில் படித்த பிறகு,

மேற்படிப்புக்காக அவரைச் சென்னைக்கு அனுப்ப அவருடைய பெரியோர்கள் விரும்பவில்லை. அக்காலத்தில் அங்கே கலெக்டர் ஆபீசில் இருந்த அவர் தமையனாராகிய இராமசாமி ஐயர் அவருக்கு இருபது ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை வாங்கித் தந்தார். கலெக்டராபீசில் இருந்துகொண்டே ப்ளீடர் பரீட்சைக்குப்படித்து அதில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார். பிறகு எப். ஏ. பரீட்சையில் தேர்ச்சியடைந்தார். அப்பால் பி. எல். பரீக்ஷைக்கும் போய்ப் பட்டம் வாங்கி வக்கீல் சன்னது பெற்று மதுரையில் இருந்துவரலானார். இடையே சிலகாலம் தாசில்தாராக இருந்தார்.

மதுரையில் அவர் வக்கீலாக இருந்த காலத்தில் அவருக்கு வர வர மதிப்பு உயர்ந்துவந்தது. பெரியவழக்குகளை அவர் ஏற்று வாதம் புரிந்தார்.

1870-ஆம் வருஷத்தில் அவர் மதுரை முனிசிபல் கமிஷனராக நியமிக்கப்பெற்றார். 1880-ஆம் வருஷம் வரையில் முனிஸிபாலிட்டியின் தொடர்புடையவராக இருந்தார். அக்காலத்தில் அவர் நகரவாசிகளுடைய நன்மையைக் கருதிப் பல காரியங்களைச் செய்தார். 1882-முதல் மூன்று வருஷங்கள் முனிஸிபாலிடியின் தலைவராக இருந்தார். அக்காலத்தில் ஒரு சிங்காரச் சோலையை உண்டாக்கினார். நகரத்தைச்சார்ந்த சாலைகளில் மரங்களை வைத்து வளர்க்கச் செய்தார். அவற்றிற் சிலமரங்கள் பட்டுப்போயின. அவர் தமிழ் நூல்களைப் படித்தும் படிப்பித்துக் கேட்டும் வரும் வழக்கமுடையவர். தமிழ்ப்படித்தவர்களிடமிருந்து பல அரியவிஷயங்களைக்கேட்டுணர்ந்து பாராட்டுவார். அதனால் தமிழ் அகத்திணை நூல்களில் இன்ன இன்னநிலத்திற்கு இன்ன இன்னமரங்கள்உரியனவென்று கூறியிருப்பதை உணர்ந்து அவற்றை ஆராய்ந்து சாலைகளில் அவ்வந் நிலங்களுக்கு ஏற்ற மரங்களை வைத்து வளர்க்கச்செய்தார்.

அக்காலத்தில் மதுரையில் கலெக்டராக இருந்த க்ரோல் துரையென்பவர் மணி ஐயருடைய பெருமையை நன்கறிந்து அவரிடம் மிக்க அன்புபாராட்டி வந்தார். மதுரைத் திருக்கோயிலைச் சுற்றியுள்ள மதிலுக்குவெளியில் பலஜனங்கள் குடிசைகள் கட்டிக்கொண்டிருந்தனர். சிலருடைய வீடுகளும் இருந்தன; அவர்களால் பல வகை அசுத்தங்கள் உண்டாயின. அக்கோயிற் கும்பாபிஷேகம் செய்வித்த அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தைச்சேர்ந்த நால்

வருள் ஒருவராகிய வேங்கடாசலஞ் செட்டியார் அதுகண்டு மனம் வருந்தினர். நிவர்த்திபண்ணுவதற்கு முயன்று பார்த்தார். அவ ரால் இயலவில்லை. மணி ஐயர் மிக்க இரக்கமும் அன்பும் உடையவ ரென்பதை யறிந்து அவரிடம் சென்று, "திருமதில் சிவபிரான் வடி வமாயிற்றே! அதைச்சுற்றி ஜனங்கள் அசுத்தம் செய்கிறார்களே! இதைக்காண எனக்கு மனம் பொறுக்கவில்லையே! நீங்கள் இதற்கு ஏதாவது வழிசெய்யவேண்டும்" என்று முறையிட்டுவந்தார். மணி ஐயர் அவர் கூறுவதன் உண்மையையும் அவருடைய சிவபக்தியை யும் உணர்ந்தார். உடனே க்ரோல் துரையினுடைய உதவியைப் பெற்று மதிற்புறத்தே இருந்தவர்களுக்கு வேறிடங்கள் வாங்கித் தந்தும் வீடுகட்டப் பணம்உதவியும் நிலத்துக்கு விலைதந்தும் அவர் களைத் திருப்தி செய்வித்தார். பின்னும்வசதியான இடங்களிலே அவர்களைக் குடியேற்றிப் பாதுகாத்தார். அப்பால் திருமதிலைச் சுற்றி நந்தவனம் அமைக்கச்செய்தார். அதைப்பாதுகாக்க அதைச் சுற்றி இரும்புக்கிராதியால் ஒரு வேலி போடச்செய்தார். அன்றி யும் உள்ளே கிணறுகளை வெட்டுவித்துப் பூஞ்செடிகளுக்கு நீர் பாய்ச்சுதற்குரிய ஏற்பாடுகளும் செய்வித்தார். அந்த நந்தவனம் இன்றும் சிறப்பாக விளங்குகின்றது. கோயிலும் நந்தவனமும் சேர்ந்துள்ள அமைப்பு ஒருபெரிய புஷ்பத்தோட்டத்தின் மத்தியில் அவ்வாலயம் இருப்பது போலத் தோற்றச் செய்யும். மணி ஐயர் அமைத்த நந்தவனத்தைக் கண்டு சிவநேசச் செல்வர்கள் உள்ளங் குளிர்ந்தார்கள். வேங்கடாசலஞ் செட்டியார் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டு அவரை வாயாரவாழ்த்தினர்.

ஆலயசம்பந்தமாக மணி ஐயர் செய்து வந்த நன்மைகள் பல. அவற்றையறிந்த மதுரை நகரவாசிகள், 'இத்தகைய உபகாரியே ஆலயத்தை நிர்வாகம் செய்யவேண்டும்' என்று எண்ணி அவரைத் தேவஸ்தான சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தார்கள். கோயிற்பணம் விரயமாகாமல் ஆலயம் சம்பந்தமான காரியங்களுக் கே உபயோகப்படவேண்டுமென்றகொள்கையுடையவர் மணிஐயர். ஆலயத்துக்குரியபொருளைத் துர்விநியோகம் செய்பவர்களிடத்தில் அவருக்கு உண்டான கோபம் மிக அதிகம். சில சமயங்களில் அத் தகையவர்களுக்குஉரியதண்டனை கிடைக்கும்படியும்செய்திருக்கிறார்.

தமிழ் அகராதி.

(சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர்,
ராவ்சாஹேப் திரு, எஸ். வையாபுரிப்பிள்ளை B. A. B. L. அவர்கள்)

அகராதி யென்றால் என்னவென்று இப்போது எல்லாருக்குந் தெரியும். சிறுவர்கள்கூட எழுத்துப்போட்டி முதலியவற்றிற்கு விடை யெழுதுவதற்காக ஏதேனும் ஓர் அகராதியை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு மூலையைத் தேடிப் பிடித்து உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். அகராதி வைத்திருப்பவனும் இக் குழந்தைகளால் பெரும்பாடு படுகிறான். அவனை மாமா மாமா என்று ஆசைப் பெயரிட்டழைத்து அகராதிப் புஸ்தகத்தை எப்படியாவது வாங்கிக்கொண்டுபோய் வைத்திருந்து பலநாள் கழித்து இதழிதழாகக்கிழிந்த நிலைமையில் கொண்டு வந்து திரும்பகொடுப்பார்கள்; அதுவும் கொடுப்பதாயிருந்தால்—கொடுக்கக்கூடியநிலைமையில் இருந்தால். இவ்வாறு சிறுகுழந்தைகளிலிருந்து பெரியமனிதர்கள்வரை இப்பொழுது மிக்க ஆசையோடு போற்றி வருகிற அகராதி சுமார் 200-ஆண்டுகளுக்கு முன்னால் தமிழில் ஏற்படவில்லை யென்பது நம்மிற் பலருக்கும் ஆச்சரியத்தை உண்டு பண்ணலாம்.

முதன் முதலில் தமிழில் அகராதியை இயற்றியவர் இத்தாலிதேசத்திலிருந்து நமது நாட்டுக்கு வந்து கிறிஸ்து சமயத்தைப் பரப்புவதற்குப் பெருமுயற்சிகள் செய்த ஒரு பாதிரியார். அவர் பெயர் கான்ஸடன்ஷியுஸ் பெஸ்கி யென்பது. ஆனால், நமது நாட்டில் அவரை வீரமாமுனிவர் என்று வழங்கி வந்தார்கள். சந்நியாசிகள் போலக் காஷாயந் தரித்து இங்கே வாழ்ந்து வந்தார். தமிழ் மொழியிலே கிறிஸ்து சமயம் பற்றி இலக்கியச் சுவையிலே சிறந்த நூல்களை இயற்றி அவற்றின் மூலமாகத்தமிழ் மக்களைத் தமது சமயத்திற் சேர்ப்பிக்க எண்ணினார். அந்நோக்கத்தைக் கொண்டு தமிழ் மொழியை நன்கு பயின்று இலக்கணங்களையும் ஒருவாறு கற்றுப் பண்டிதராயினார். நிகண்டுகளை மனப்பாடம் பண்ணி ஞாபகத்தில் வைப்பது சிரமமாக இருந்ததினாலே, அவற்றை அகராதியாகச் செய்து விடுவது நலமென்று எண்ணி 'சதுரகராதி' என்று வழங்கும் அகராதியை முதன் முதலில் இயற்றுவித்தார். இந்த அகராதியைஇயற்றியது கி. பி. 1732இல்.

'வீரமாமுனிவர் அகராதி இயற்றுவதற்கு முன் தமிழ் மக்களுக்குச் சொற்களின் பொருளைத் தெரிந்து கொள்ளவேண்டும் அவசியமே ஏற்படவில்லையா?' என்று நீங்கள் கேட்கலாம். தமிழிலக்கிய சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் இந்தவிதமான அவசியம் ஏற்படாத காலமே கிடை

யாது என்று சொல்லி விடலாம். இலக்கியம் என்று சொன்னாலே, அது சாமானிய மக்கள்பேசும் வழக்கு மொழியினின்று சிறிதேனும் வேறுபட்ட நடையில் அமைந்திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே, இலக்கியச்சொற்களெல்லாம் சாதாரணமக்களுக்குத்தெரிந்தவையாய்த்தான் இருக்குமென்று கூறமுடியாது. தெரியாத வார்த்தைகளும் அக்கூட்டத்தில் இருக்கத்தான் வேண்டும். இவற்றின் பொருளைத் தெரிந்து கொள்வதற்கு ஏதேனும் நூல்கள் இருந்தனவா?

சொற்பொருளுணர்த்துங் கருவி நூல்கள் இருந்தனவென்பதும் அவற்றை 'நிகண்டு' என்ற பெயரால் வழங்கின ரென்பதும் நாம் அனைவரும் அறிந்தனவே. 'இப் பெயர் வடமொழியாயிற்றே; தமிழில் இக் கருவி நூலுக்குப் பெயரில்லையா?' என்று சிலர் கேட்கலாம். தமிழ்ப் பெயரும் உண்டு. 'உரிச்சொற் பனுவல்' என்பது அப்பெயர். நெருடான இத்தமிழ்ப் பெயர் நாளடைவில் மறைந்துவிட்டது. நிகண்டு என்ற பெயரே தமிழாகி நிலைத்துவிட்டது.

நிகண்டுகள் இருக்கும்போது அகராதிதோன்றுதற்கு என்னஅவசியம் ஏற்பட்டதென்று கேட்சலாம். இவ்விரண்டு வகைப்பட்ட நூல்களும் அமைந்துள்ள முறையின் வேறுபாடே தக்ககாரணமாகும். முதலாவது: நிகண்டுகள் செய்யுளில் அமைக்கப்பெற்றிருக்கும்; செய்யுளின் பொருள் விளங்குவது எத்தனை கஷ்டமென்பது சொல்லவேண்டுமா? இரண்டாவது: நிகண்டு நூல்களில் தெய்வப்பெயர்கள், மக்கட்பெயர்கள் முதலாகிய பல தொகுதிகளிலே வார்த்தைகள் அமைந்திருக்கும். ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியவேண்டுமானால் அச்சொல் எந்தத் தொகுதியைச் சார்ந்ததென்று தெரியவேண்டும். பிற்பாடு அந்தத் தொகுதி முழுவதையும் வாசித்தல்லாமல் பொருள் கண்டு பிடிப்பதும் இயலாது. மூன்றாவதாக: மனப்பாடஞ் செய்வதற்கென்றே அமைந்தன இந்நிகண்டு நூல்கள். மனப்பாடஞ் செய்வது எவ்வளவு சிரமமான காரியமென்பது நாம் நன்றாக அறிவோம்! அகராதியிலே யென்றால், ஒவ்வொரு சொல்லும் அ, ஆ முதலிய நெடுங்கணக்கின் எழுத்து வரிசையிலே வைத்திருக்கும். இவ் வரிசை தெரிந்தால் அகராதியில் எந்தச் சொல்லையும் எடுத்துப் பொருள் தெரிந்துகொள்ளலாம். எழுத்துவாசனையுள்ளவர்களில் இந்த எழுத்து வரிசைதெரியாதவர்கள் உண்டோ? இத்தனை எளிதாக இருப்பதனால்தான் நான்முதவிலே கூறியபடிகுழந்தைகள்கூட அகராதிகளை உபயோகப்படுத்துகிறார்கள்.

அகராதியைப்போல நோக்கி யுணரக்கூடிய முறையிலே நிகண்டுகளை மாற்றவேண்டுமென்று நம்முன்னோர்களுக்குத் தோன்றவில்லையாவென்று

நீங்கள் கேட்கலாம். அவர்களும் அவ்வாறு மாற்றுவதற்கு மிகவும் முயற்சி செய்திருக்கிறார்களென்பது நிகண்டுகளின் சரித்திரத்தை நோக்கினால் விளங்கும். இம்முயற்சி முதன் முதலில் ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களையும் எடுத்துக்கூறும் பதினோராவது நிகண்டுப் பகுதியிலே தான் நடைபெற்றது. முதற்படியாக இத்தொகுதியிலே செய்யுட் சுவையின் பொருட்டு ஏகதேசமாகச் சொற்கள் எதுகையிலே வைக்கப்பட்டன. இம் முறையைத் திவாகர ஏட்டுப் பிரதிகளிற் காணலாம். அடுத்தபடியாக இச்சொற்களைக் ககரவெதுகை சகரவெதுகை முதலிய பகுதிகளாகப் பாகுபாடு செய்து எதுகையை வைத்துக்கொண்டே சொற்களை எளிதில் எடுக்கக்கூடிய முறையானது கையாளப்பட்டது. இம்முறையைச் சூடாமணி நிகண்டிற் காணலாம். மூன்றாம்படியாகச் சூடாமணி நிகண்டிலே காணப்பட்ட குறைகளை நீக்க முயற்சி செய்தார்கள். ஓர் எதுகையிலே பிறிதோரெதுகைச்சொல் வந்து கலத்தல், செய்யுளுக்கு வேண்டிய அநுவசியமான அடைமொழிகளைச் சேர்த்துச் சொல்லின் பொருளைக் கருக வைத்தல் என்றவையே அக்குறைகள். இக் குறைகள் இல்லாது செய்யப்பட்ட நிகண்டுகள் நாநார்த்த தீபிகை முதலியன. இம்முறையும் திருப்திகரமாயில்லாததினாலே நான்காம்படியாக அகராதிமுறை அரைகுறையாகக் கையாளப்பட்டது. இந்நான்காம் முறையைக் கொண்டெழுந்த முதலாவது நூல் 'அகராதி நிகண்டு'.

இந்த அகராதி நிகண்டைச் செய்தவர் இரேவணசித்திரியரென்ற வீரசைவர். நூல் செய்த காலம் கி. பி. 1594. இவ்வாண்டிற்கு முன் அகராதி என்ற சொல் தமிழ் மொழியில் இல்லை. நல்ல சுபமுகூர்த்தத்தில் இப்பெயரை இட்டிருத்தல் வேண்டும்! ஏனென்றால் இப்பெயர்தான் இப்பொழுது நிலைத்துவிட்டது.

அகராதி நிகண்டிலே பல குறைகள் இருந்தன. அகரத்திலே தொடங்கும் சொற்களை ஒரு பொருளுடையன, இரு பொருளுடையன, முப்பொருளுடையன என்பவை முதலாகப் பகுத்து முதலெழுத்துமாத்திரம் அகராதி வரிசைக் குரியபடி அமைத்து இந்நூல் செய்யப்பட்டது. ஆதலால் அகரத்தில் தொடங்கும் ஒருசொல்லின் பொருள் தெரியவேண்டுமானால் அச்சொல்லுக்கு எத்தனை பொருளுண்டென்பது முதலில் தெரிய வேண்டும்; பிற்பாடு அத்தனை பொருளுடைய பகுதியில் அச்சொல்லைத் தேடிப் பிடிக்கவேண்டும். இக்குறைகளை நீக்கி, ஒருபொருள், இருபொருள் முதலிய பாகுபாடுகளை யொழித்து, அகராதி வரிசையை மேன்மேலும் அபிவிருத்தி செய்த நூல்கள் பல்பொருட் சூடாமணி, பொதிகை நிகண்டு முதலிய நிகண்டுகளாம். காலக்கிரமத்தில் மற்றக் குறைகளெல்லாம் ஒழிந்த போதிலும் அகராதி வரிசையை முழுதும் கையாளாத குறை இருந்தே வந்தது. அகராதிமுறைப்படி, அங்கம்என்றசொல்அரசன் என்பதற்குமுன் வரவேண்டும். இந்நிகண்டுகளில் அரசன் என்பதற்குப்பின் அங்கம் காணப்

படும். முதலெழுத்தில் மாத்திரம் அகரவரிசையைப்பின்பற்றிய நூல்களில் இதுபோன்ற குறைகள் இருக்கும். முதலிரண்டெழுத்துக்களில் அகராதி வரிசையைப் பின்பற்றிய நூல்களில் அங்குலி என்பது அங்கம் என்பதற்கு முன் காணப்படும். இவை போன்ற குறைகளெல்லாம் ஒழிந்த பிற்பாடு தான் அகராதி தோன்றிற்று.

அகராதி நிகண்டு என்பதில் அகராதி என்பது ஓர் அடைமொழி யென்பதை நாம் மறந்துவிடலாகாது. அகாரமாதிய வரிசையிலே சொற்களை அமைத்த நிகண்டு என்பதே இதன் பொருள். தற்காலத்தில் அகராதி யென்ற நூற்பெயரால் நாம்கொள்ளும் கருத்தை, 'அகராதி மோனைக் ககராதி யெதுகை' என்ற பெயரால் ஒரு தமிழ் நூல் விளக்குகிறது. அகராதி யென்ற சொல்லை நூற்பெயராக முதன்முதலில் அமைத்தது வீரமாமுனிவரே. இந்த அகராதி யென்ற பெயரோடு 'ஏபிஸிடேரியம்' (Abcdarium) என்ற ஆங்கில நூற்பெயரை ஒப்பிடலாம்.

அகராதி வரிசையைப் பற்றி இதுவரை சொன்னேன். இனி அகராதியிற் சேர்க்கவேண்டிய சொற்களைப் பற்றிக் கவனிப்போம். இலக்கியங்களிலே வருகிற கடினமான சொற்களை மாத்திரம் சேர்க்கவேண்டுமென்ற கருத்து முற்காலத்திருந்தது. நிகண்டுகளிற் காணப்படுஞ் சொற்களிற் பெரும்பாலானவை இவ்வகைக் கடின பதங்களேயாகும். இக்கருத்து இப்போது மாறிவிட்டது. நிரம்பிய உத்தமமான அகராதியில், ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களும் காணப்படுதல் வேண்டுமென்பதே இப்போதுள்ள அகராதியாளர்களுடைய கருத்து. இதனால் அகராதி யென்பது பொருளை மாத்திரம் உணர்த்துகிற கருவி நூல் என்ற கொள்கை மாறி, இவ்வியல்போடு ஒரு மொழியின் ஆரம்பகாலத்தில் இருந்து தற்காலம் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆகரமாகவும் அது விளங்குதல் வேண்டும் என்ற கொள்கை இப்போது நிலைபெற்றுவிட்டது. ஆனால் இந்நோக்கம் நிறைவேறுதலிலே பலவகையான இடையூறுகள் உண்டு. முதலாவது எல்லாச் சொற்களையும் ஒருவரோ, ஒருசில கூட்டத்தாரோ தெரிந்து சொல்லுதல் வலாது. ஒருமொழியிலே பயின்று வரும் எல்லாப் பிரதேசத்தாரும், இனத்தாரும், சாதியாரும், தொழிலாரும், பருவத்தாரும் அகராதியின் மேன்மையான நோக்கங்களையும் முறைகளையும் உணர்ந்து ஒத்துழைத்தாலன்றி ஓர் உத்தம அகராதி இயற்றமுடியாது. ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையிலிருந்து வெளியிடப்பட்ட புதிய ஆங்கில அகராதி (The New English Dictionary) யொன்றே இங்ஙனம் இயன்ற ஓர் உத்தம அகராதி யென்று ஒருவாறுகக் கூறலாம். உத்தம அகராதியின் இயல்பு இவ்வாறிருக்க, நம் நாட்டில் ஒரு சிலர் 'இவ்வகராதி

இலக்கிய அகராதியா வழக்கியலகராதியா? மரபகராதியா? குறுகில அகராதியா? எல்லாமா? இன்றேல் ஒவ்வொன்றிற் கொஞ்சமா?' என்று கேட்கிறார்கள்? இவர்களுக்கு அகராதியின் உண்மை யியல்பு தெரிந்தால் இவ்வாறு கூறமாட்டார்கள். இரண்டாவது இடையூறு, அகராதி எல்லையின்றி விரிந்து விலையதிகரித்துப் பெரும்பாலார்க்குக் கைக்கெட்டாததாய் முடிந்துவிடும் என்பதே.

இக்காரணங்களால், பொது அகராதிதவிர, தொழில்பற்றியும், சாஸ்திரம்பற்றியும், இடம்பற்றியும், காலம்பற்றியும்விரிவான அகராதிகள்உண்டாக வேண்டும். இவற்றிலேதான் சொற்பொருளை விரிவாகப்படங்கள் முதலிய உபகரணங்களால்விளக்கமுடியும். எனவேஒவ்வோர் அகராதியும் அதுமேற்கொண்டுள்ள நோக்கத்திற் கிணங்க அமைக்கப்பெறுதல் வேண்டும். சாதாரணமாக வழங்கும் அகராதிகளில் மேற்குறித்த பல வகைச் சொற்களுட் சில மிகுந்தும் சில குறைந்தும் இருப்பது இயல்பே.

இவ்விடத்தில் வேறொரு விஷயமுங் கவனிக்கவேண்டும். ஒரு சொல்லானது பார்வைக்கு ஒன்றாகத் தோன்றிய போதிலும் சொல்வரலாற்றினைக் கருதுமிடத்துப் பல சொற்களாக இருக்கும். உதாரணமாக அகம் என்பதை யெடுத்துக்கொள்ளுங்கள். இச்சொல் அஹம், அஹ, அக, அம்ஹம் என்ற பல சொற்களிலிருந்து வந்த பல பொருள்களையுடையது. இவ்வரலாற்றுக்கேற்க அகம் என்பதைத் தனித்தனிச் சொல்லாகக்கொள்ள வேண்டும்.

இன்னுமொன்று: பேச்சு வழக்கிலே பதங்கள் உச்சாரணந் திரிந்து வழங்குதல் சர்வ சாதாரணம். இலக்கியங்களில் வந்துள்ள சொல்லைத் 'திரிந்த' சொல் என்றும் கூறுவது மரபு. இவ்வாறு திரிந்து வழங்குஞ் சொற்களும் அகராதியில் இடம் பெறுதல் வேண்டும். இவற்றைத் திருந்திய வடிவம் என்று கொள்ளுதலுங் கூடாது. இலக்கியங்களில் இவற்றை வழங்கலாமென அகராதி அனுமதிப்பதாகக் கொள்ளுதலுங் கூடாது. பேச்சு வழக்கிலுள்ள சொற்களுக்கும் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.

இனி அகராதியிற் கொடுக்கப்படவேண்டும் பொருளைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சதுரகராதி முதலியவற்றில் நிகண்டுப் பொருளை வேறு விளக்கமின்றி அப்படியே கொடுத்துவிடுவது வழக்கம். உதாரணமாக வேற்றிசைப் பாவின் பொருள் 'சருக்க முடிவினும், இலம்பக முடிவினும் விருத்த நடையது' எனக் கொடுப்பர். ஒரு சொல்லுக்குப் பல பொருள்களிருக்குமானால் அப்பொருள்களையும் அகராதிக் கிரமத்தில் கொடுப்பது வழக்கம். உதாரணமாகத் திகிரி என்ற சொல்லின் பொருள்கள் உருளை சக்கராயுதம் தண்டசக்கரம் திரிகை தேர்

பண்டி மலை மூங்கில் வட்டம் என அகராதிவரிசையிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சொல்லின் வரலாற்றினை உணர்த்தும் பொருள்களைக் காலக்கிரமமாக முறைப்படுத்திக் கொடுத்தல்வேண்டும். இவ்வாறு சொற்பொருள்களையும்வியுத்பத்திமுதலியனவற்றையும்நன்றாகஆராய்ந்து செய்யக்கூடுமானால், அது ஒவ்வொரு சொல்லுக்கும் ஜாதகங் கணிப்பதுபோலாய்விடும். இன்ன காலத்தில் இன்ன இடத்தில் ஒரு சொல் பிறந்தது. இன்ன காலத்தில் இன்ன காரணத்தால் இன்ன வகையிற் பொருள் மாறுபட்டது. இன்ன காலத்திற்குப் பின் மறைந்துவிட்டது. என ஒரு சொல்லின் ஜீவிய சரித்திர முழுமையும் அகராதியிற் காணப்படும். புதிய ஆங்கில அகராதியில் இவ்விவரங்கள் யாவுங் கொடுக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் அகராதி இயற்றுதற்குத் தக்கமொழியாராய்ச்சி வேண்டும். நமது நாட்டில் மொழி ஆராய்ச்சி இன்னும் குழந்தைப் பருவத்திலே இருக்கிறது; போலியாராய்ச்சிகளேபரவியிருக்கின்றன. இவ்வாராய்ச்சிகளைவிநோதார்த்தமாகக் கொண்டு ரசித்துக் களிக்கலாமேயன்றி உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. திருந்திய மொழியாராய்ச்சியினால் உண்மை காணக்கூடிய இடங்களில் சொற்பொருளைக் காலக்கிரமத்தில் ஒழுங்குபடுத்திக் கொடுப்பது அகராதியாளர் கடமை. இயலாத இடங்களில் இயைபுபற்றிப் பொருள்களைக் கொடுக்கவேண்டும். இதுவும் இயலாத இடங்களில் பெருவழக்கிலுள்ள பொருள் யாது, அடுத்தபடியாகவுள்ள பொருள்யாது, என்று வழக்கின் பெரும்பான்மை சிறுபான்மை பற்றிப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். இப்படியாகப் பலவகைப்பட்ட நியமங்களை மேற்கொண்டு பொருள்களைக் கிரமப்படுத்தல் அவசியமாகும்.

இப்பொருள்களைத் தெளிவுபெற விளக்கவேண்டுமானால் உதாரணங்களால் மட்டுமே அது முடியும். காலத்தால் முற்பட்ட உதாரணங்களின் மூலமாய் விளக்குதலே நேர்மையான முறை. இலக்கியங்களையும் மற்ற நூல்களையும் காலமுறைப்படி ஒழுங்குபடுத்தி வைத்துக்கொண்டு முக்கியமான நூல்களுக்கெல்லாம் சொல்லகராதிதயார்ச்செய்தபின் அகராதிவேலையைத் தொடங்குதல் வேண்டும். இவ்வாறு தொடங்கி முடித்தற்கு மிக நீண்டகாலம் செல்லும். உதாரணமாக, புதிய ஆங்கிலப் பேரகராதியைச் செய்து முடித்தற்குச் சுமார் 70-வருஷ காலம் வேண்டியதாயிருந்தது. அதற்குப் பல்லாயிரக் கணக்கில் ஆங்கில அறிஞர்கள் உதவி செய்தார்கள். இவ்வாறு பெரிய நோக்கங்கொண்டு செய்யாத வரையில், உதாரணங்கள் முதலிய விஷயங்களில் குறையிருந்து கொண்டேயிருக்கும். அடுத்தபடியாகச் செய்யத்தக்கது யாது? சிறந்த நூல்களிலிருந்து சந்தர்ப்பத்தால் பொருள் விளங்குமாறு உதாரணங்களைக் கொடுப்பதொன்றே இயலும்.

மேற்குறித்த முறைகளையும் மற்ற நியமங்களையும் இயன்றவரை கைக்கொண்டு தமிழ் லெக்ஸிகன் என்னும் பேரகராதி வெளிவந்துள்ளது. இவ்வகை அகராதி தமிழ்மொழி யுணர்ச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பெருங்கருவி யென்பதை அறிந்து நேர்ந்த இடையூறுகளைப் பொருட்படுத்தாது ஏராளமான செலவில் அதனை இயற்றுவித்து வெளியிட்ட சென்னைச் சர்வகலாசாலையாரது பெருஞ்செயல் என்றும் பாராட்டுதற்குரியது.

—கலைமகள்.

மகிடாசுர சம்மாரம்.

முன்னொரு காலத்திற் பிரமவிஷ்ணுக்கள் ஒருவரோடொருவர் மாறுபட்டு நீடித்த காலமாசயுத்தஞ் செய்தனர். இங்ஙனம் இருவருக்குமிடையே யுத்தம் நிகழ, பிரமதேவர் பெரிதும் வெகுண்டு மகிடன் எனப்படும் ஓர் அசுரனை உடனே உண்டாக்கித் திருமாலின் வலிமையைக் கெடுக்கும்படி யேவ, திருமாலும் உடனே புலிமுகன் என்னும் அசுரனைப் படைத்துப் பிரமதேவர் மீது விடுத்தனர். பிரம விஷ்ணுக்களிருவரும் தமக்கு மாறாயெழுந்த இரு அசுரர்களோடுஞ் சமரேற்றுப் பொருது ஆற்றாதவராய் அகன்றனர். ஆனால், இரு அசுரர்களும் அவ்வளவில் நில்லாது ஏனைய தேவர்களுக்குப் பேரிடர் புரியத் தொடங்கினர். தேவர்கள் மகிடன் புலிமுகனென்னுமிருவரும் தமக்குச் செய்யும் இன்னல்களைச் சகிக்கலாற்றாராய்க் கைலயங்கிரி சென்று கண்ணுதற் பரம்பொருளை வணங்கி அசுரரிருவர் செய்யும் அநியாயத்தை முறையிட்டனர்.

அடியார்க்கு நேரும் இடைஞ்சலை நீக்கியருளும் விமலமூர்த்தியாகிய பரமேசுவரன் தமது வாமபாகத்திலிருந்த உலகமாதாவாகிய ஈசுவரியின் திருமுகத்தை உற்றுப்பார்க்க, பெருமாட்டியாருடைய திருமுகத்தினின்றும் படைக் கலங்களை யேந்தியபதினெட்டுத்திருக்கரங்களுடனே துர்க்கா தேவி தோன்றிப் பரனையும் பரையையும் வணங்கி, "தமியேன் செய்ய வேண்டிய குற்றேவல் எதுவோ பணித்தருள வேண்டும்" என்றிரந்தாள். வணங்கிய துர்க்கைக்குக் கோபத்தோடு கூடிய ஒரு சிங்கேற்றைப் பெருமான் ஊர்தியாக வழங்கி "துர்ச்கையே, தேவர்கட்குப் பேரிடர் விளைக்கும் மகிடன் புலிமுகனென்னுமிருவர் வலியையும் கெடுத்து வருதியெனப் பணித்துத் திருவருள் பாலிக்க, துர்க்கை விடைபெற்றுக்கொண்டு முதற் புலிமுகனிடஞ் சென்று அவனோடு சமர்செய்து அவனைக் கொன்றபின்னர் மகிடனை எதிர்த்தாள்.

மகிடன் சிறிதும் பின்னிடானாய்க் கொடிய விஷமென உருத்துச் சமர் புரிந்தான். துர்க்கா தேவியும் மகிடனுக்கு இடைந்திலள். மகிடன் பேரொலி செய்யவே ஆன்மகோடிகள் சஞ்சலமுற்றன. துர்க்காதேவி தன் திருக்கரமொன்றிற் கொண்ட வாட்படையால் அந்த அசுரனுடைய எருமைத் தலையை வெட்டி வீழ்த்தினாள். இரத்தம் ஆறாகப் பெருக இரத்தப் பிரவாகத்திற் கிடந்த எருமைத்தலை உயிர்த்தெழுந்து தேவியுடன் யுத்தஞ் செய்யத் தொடங்கியது. தேவி தனது திருக்கரமொன்றிற் பிடித்துள்ள சூலப்படையைச் சுழற்றியெடுத்து மகிடத்தலையின் உச்சியிற் குத்தி அந்தத் தலையைத் தன் திருவடியினால் அமுக்கி நெரித்தனள். இறைவியின் திருவடிபட்ட மாத்திரத்தே மகிடத்தலை நீங்கிவிட, அந்த அசுரன் ஞானத்தோடு கூடிய நல்ல தலையைப் பெற்றுத் தேவியை பின்வருமாறு துதிப்பானாயினன்.

* ஓரெட்டிதழ் வட்டத் துள்ளாய சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப் பராபரையே
வாரிப் படுநஞ் சமுதாக்கும் வால்வளைக்கை
வேரிக் கரும்பே வித்தின் றிவிளை மூலமே.

ஆதியா யந்தத்தி னந்தமாய் நின்றோர்க்குப்
பாதியா யொன்றாய்ப் பலவாகிப் பல்லுயிராய்ப்
பேதியா நின்றாய் பெருமாட்டி நின்பெருமை
சோதியா நின்றார்க் கெளிதன்றே தொல்லவமே.

தோன்று சராசரங்க ளெல்லாந் தொடர்விடா
தேன்ற சிவமயமு நின்னன்றி யில்லையால்
ஆன்ற விருப்பி னருந்துவன வின்றாமே
ஊன்று சுவையுள வோர்ந்தா லொளிவிளக்கே.

முச்செயலுங் காட்டி யவைபுரக்கு மூவரைத்தன்
னிச்சையினிற் காட்டியவ ருளத்து மெட்டாயாற்
பச்சை யிளங்குதலைக் கிள்ளாய் பரையேநின்
விச்சையிவை யென்றால் விடுத்துணர வல்லாரார்.

பேதாதி பேதம் பிறந்தவுயிர்த் தொகைக்கோர்
ஆதார மாகி யளவை யறிந்தளித்தாய்
ஓதா மறைநூ லுபநிடதத் துண்மயமாம்
பாதார விந்தம்பெறப் பெற்றேன் பாதகனே.

மெய்யுணர்வு வரப்பெற்றமகிடாசுரன் இவ்வாறுபரவிவணங்குதலும், தேவி அவனுக்கு அருள் பாலித்து அவனைச் சிவகணத்தவருள் ஒருவனாய்க் கயிலையங்கிரியிற் செல்லப் பணித்தாள். அவனும் அங்ஙனம் சென்று வாழ்ந்தான்.

உலகத்தின் கண்ணேயுள்ள ஆன்மகோடிகளுள் எவர்க்காயினும் இந்தத் தாமச (எருமைத்) குணம் தடித்து அதனால் அக்கிரமம் அதிகரித்து இடர் நேருங்காலத்து எங்கள் மாதாவாகிய துர்க்காதேவி அந்த எருமைக் குணத்தைத் தலையெடுக்கவொட்டாது காலால் நசித்து இல்லாமற் செய்து தன்னை அன்புடன் வழிபடுவோர்க்கு அருள் புரிவளென்பது நிச்சயம்.

—இந்துசாதனம்.

* இந்தத் தோத்திரப்பாக்கள் உபதேசகாண்டத்துள்ளன. துர்க்கையம்மைக்குரிய இந்தத் தோத்திரங்களைத் துர்க்கை பூசைகாலத்தும் கிரகதோஷம் முதலியன நேர்ந்த காலத்தும் பக்தியோடு பாராயணஞ் செய்வோர் தம்மைப் பீடித்த துன்பமனைத்தும் நீங்கப்பெற்று இனிது வாழ்வாரென்பது பெரியோர் கொள்கை.

செய்தித்திரட்டு.

காரைக்குடி:— இராமநாதபுரம் ஜில்லா 2-வது தமிழர் மகாநாடு திருவாளர், S. சோமசுந்தர பாரதியாரவர்கள் M. A. B. L. தலைமையில் நவம்பர் 20உ நடைபெற்றது.

ஆண்டவனை வழக்கு:— தன்னை அவதூறு செய்ததாக தேவகோட்டை ஜாயிண்டு மாஜிஸ்திரேட்டாரவர்கள் முன்னிலையில் தொடுத்திருக்கும் வழக்கு விசாரணையிலிருந்து வருகிறது.

கடவுள் கண்கொடுத்தார்:— தஞ்சை ஜில்லா சின்னத்தம்பி என்னும் 22-வயது நிரம்பிய ஒருவற்கு $2\frac{1}{2}$ ஆண்டுகளாக இருகண்களுந் தெரியாமலும் வாய்பேசமுடியாமலுமிருந்து அவர் தந்தை ரூபா 2000-வரை செலவிட்டுப் பண்டிதம் செய்தும் பயன்பெறாதநிலைமையில் திருவிடைமருதூருக்கு அழைத்து வந்து காடேட்ரறும் ஆலயப்பொய்கையின் புனித நீராடித்திருவீதிவலம் வரச்செய்து ஸ்ரீ மகாலிங்க சுவாமியை வணங்கிவந்த நிலைமையில் ஒருநாள் சுவாமி சந்நிதியில் தண்டனிட்டெழுந்து பிரார்த்தித்து நிற்கையில் இருகண்களும்விளக்கமாகிச்சிலவார்த்தைகளும் வினம்பி மகாலிங்க மூர்த்தியைத் தோத்தரித்தான். கடவுளருளால் கண்பெற்றவனும் பத்தாவது வகுப்பில் தேறி தஞ்சை போர்டில் கிலப்படம் எழுதும் வேலைபார்த்தவனுமாகிய அவனைப் பலரும்வந்து பார்த்துக்கடவுள் அருளை வியந்து 'கடவுளை நம்பினல் கண்ணைப் பெறலாமென்ற முதுமொழியைப் போற்றுகின்றனர்.

தஞ்சை:— பெருவுடையார் ஆலயத்தில் இராசராச சோழ மன்னன் பிறந்தநாட் கொண்டாட்டம் நவம்பர் 2உ நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து சரித்திரப்பேராசிரியர் ராவ்சாகேப் C. S. சீனிவாசாசாரியார் M. A. அவர்கள் தென்னிந்திய சரித்திரத்தில் 'இராசராச சோழனும் அவனது இடமும்' என்பதுபற்றி விரிவுரை யாற்றினர்.

பெரியநாயகி சமேத பிருகதீசுவரரையும், இராசராச சோழனையும் திருவீதிவலம் செய்விக்கப்பெற்றது.

திரு. பண்டிதமணி அவர்களின் சொற்பொழிவு:— அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பேராசிரியர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் நவம்பர் 18-ல் சென்னை கோகலே மண்டபத்தில் "முற்கால தற்கால கல்விமுறை" என்பதுபற்றி ஓர் சொற்பொழிவாற்றினார்.

சிவநேசன்.

நூல் வெளியீடு.

திருத்தல சிவாலயத்திருப்பணி நடைபெறுங் காரணத்தாலு இத்திருத்தல புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டிய திருத்தலினாலும், அன்பிற் கறிகுறியாகப் புலவர் பெருமக்கள் பலரால் அவ்வப்போது வழங்கப்பெற்றுள்ள தனிச்செய்யுட்களெல்லாவற்றையுந் தொகுத்துப் புத்தகவடிவத்தில் வெளிவரச் செய்யவேண்டியதிருத்தலினாலும், திருக்கயிலாயகிரி யாத்திரையின் தொடர்ச்சியைப் பதிப்பித்து வெளியிடவேண்டியதிருத்தலினாலும், அவைகள் முற்றும் நிறைவெய்திய பின்னரே "சிவநேசன்" பிற்சேர்க்கையாக உடன் பதிக்கப்பட வேண்டிய ஏனைய நூல்களைப் பதிப்பித்து வெளியிடக்கூடும்.

பத்திரிகைகள்:— நமது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும் பத்திரிகைகள் இன்றுதோன்றி நாளை மறைவதே வெகுசகஜமாக இருக்கிறது. இளைஞர்கள் பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்தால், பொதுஜனத் தொண்டும், ஜீவனோபாயமும் செய்ய முடியும் என்று எண்ணுகிறார்கள், அது பெருந் தவறாகும். அதன் காரணமாகவே பத்திரிகைகள் இன்று தோன்றுவதும் நாளை மறைவதுமாக இருக்கின்றன. புனிதத்தொழிலான பத்திரிகைத் தொழில், மற்றத்தொழில்களைச் சிறிய மூலதனத்தைக்கொண்டு ஆரம்பித்து விருத்திசெய்வது போன்றதல்ல; அதிபொருளாதார பலம் கொண்டவர்களே பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்து நடத்த முடியும். "பத்திரிகாசிரியர்" பதவி வகிக்க அதி ஆற்றலும், அறிவும், விரிந்த மனோபாவமும் வேண்டும். லாபகரத்தை உத்தேசித்துப் பத்திரிகைத்தொழிலை ஆரம்பித்து நடத்தமுடியாது. இன்றைக்கும் இந்தியாவில் பல ஆயிரக் கணக்கான பத்திரிகைகளிருந்தும் 31 பத்திரிகைகளேலாபமான முறையில் நடைபெற்று வருகின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

—இந்துநேசன்.

"சிவநேசன்" ஆண்டுத் தொகை விவரம்.

உள்நாட்டிற்கு	ரூ 1—8—0	அதற்கு மூலதனம்	30—0—0
அயல்நாட்டிற்கு	ரூ 2—0—0	அதற்கு மூலதனம்	40—0—0

தனிப்பிரதி விலை அணா 0—2—0

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

திட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.